# தூதன்

தூதன்-24 ஜூன் 2015 தூது-06




Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| உதவி போதகர் மடல் | 04 |
| உதவி ஆயரம்மா மடல் | 06 |
| செயலர் மடல் | 08 |
| இயேசு கை இறுதி விருந்து | 10 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 11 |
| தெய்வீக அன்பு | 12 |
| என்னை நம்பும் | 14 |
| ஆராதனை பாடல்கள் | 15 |
| நமக்கு மிக மிக சாதாரணம் | 16 |
| திருச்சபை ஜெபநாள் | 18 |
| தெரிந்து கொள்வோம் | 20 |
| Family Devotion | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| Health Tips | 26 |
| Birthday Celebrants | 30 |
| Wedding Anniversary Celebrants | 33 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: csitapar@emirates.net.ae

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே,

இதோ உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்ற இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரில் அன்புடன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாத மடல் வழியாகவும் உங்களோடு தொடர்பு கொள்ள கர்த்தர் நாட்களை கூட்டி தந்துள்ளார். நமது திருச்சபை நிகழ்வுமுறைமைகளில் குறித்தபடி பொது சபை நடைபெற்று முடிந்திருக்குமேயென்றால், நான் இந்த மாதம் இருந்திருக்க முடியாது. ஜுன் மாதம் 5-ம் தேதி பொதுசபை என்று சபைக்குழு தீர்மானித்து, போதகர் ஜுன் மாதம் 10-ம் தேதி வரை இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடியினால், முதன்மை பேராயர் அனுமதியுடன் இங்கிருக்கிறேன். உங்களனைவருடைய அன்புக்கும், ஆதரவுகளுக்கும், உபசரிப்புகளுக்கும், ஜெபங்களுக்கும், என்றும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். தொடர்ந்து நம் குடும்பங்களையும், திருச்சபையையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. ஏற்ற வேளையில் புதிய ஆயர் வந்து திருச்சபையை பொறுப்பேற்று நடத்த ஆண்டவர் கிருபை செய்வாராக.

இந்த வேளையில் நம் முற்பிதாக்களில் முதன்மையானவரும், விசுவாசிகளின் தந்தை என்று போற்றப்படுகிறவருமாகிய ஆபிரகாமின் வாழ்வை நமக்கு சான்றாக்கி, நம்முடைய வாழ்வை சீர்தூக்கி பார்ப்பது நமது வாழ்வில் ஆசீர்வாதமாய் அமையும் என்று நம்புகிறேன்.

ஆபிரகாமை குறித்து அவருடைய வேலைக்காரனாகிய எலியேசர் சொல்லும்போது, “கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார். அவர் சீமானாயிருக்கிறார். கர்த்தர் அவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும், கொடுத்திருக்கிறார் என்றான். (ஆதி. 24:35). இந்த ஆசீர்வாதத்தை அவர் சொந்தமாக்க அவருடைய வாழ்வில் காணப்பட்ட காரியங்கள் மேன்மையானவைகள்.

### 1.கர்த்தருக்கு கீழ்ப்படிந்தார்

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும், விட்டு புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். (ஆதி. 12:1-3) கர்த்தர் ஆபிரகாமிடம் சொன்னபடியே அவர் புறப்பட்டுப் போனார். தன்னுடைய வாழ்வின் ஏற்றத்தில், தாழ்வில், உயர்வில் ஆபிரகாமோடு இருந்தார். தனது வாழ்வில் குழந்தை இல்லாத நிலை இருந்தது. அந்த குறைவிலும் ஆண்டவருடைய சத்தத்திற்கு கீழ்படிந்து நிறைவு பெற்றார்.

ஆண்டவர் கொடுத்த மகனை பலியாக கேட்டபோது அதற்கும் கீழ்படிந்தபோது ஆண்டவர் அவரை ஆசீர்வதித்தார். இன்று கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் ஆசீர்வதிக்கப்பட நம்முடைய தாழ்வில், உயர்வில், ஏற்றத்தில், குறைவில், நிறைவில் ஆண்டவரோடு இருப்போம். அவர் நம்மை ஆசீர்வதிப்பார். எந்த நிலையிலும் ஆண்டவரோடு இருந்து அவருடைய சத்தத்திற்கு கீழ்படிவோம்.

## 2. தன்னைபோல பிறரையும் நேசித்தார்

தன்னை போல பிறரையும் நேசிப்பது கிறிஸ்தவ தத்துவம். வாழ்க்கை கோட்பாடு. ராஜரீக கற்பனை. ஆபிரகாமின் மந்தை மேய்ப்பர்களுக்கும், லோத்தின் மந்தை மேய்ப்பர்களுக்கும், வாக்குவாதம் ஏற்பட்ட போது, என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம். நாம் சகோதரர். இந்த தேசம் எல்லாம் உனக்கு முன் இருக்கிறது அல்லவா? நீ என்னை விட்டுப் பிரிந்து போகலாம், நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன். நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான். (ஆதி. 13:5,6,9). விட்டுக்கொடுக்கும் தன்மையுடன் தன் உணர்வைபோன்றே பிறர் உணர்வையும் மதித்தான். உலக ஆசீர்வாதத்தால் துரிதமாக முன்வர வேண்டும் என்று எண்ணாமல் கடவுளின் ஆசீர்வாதமே பெரிது என்று வாழ்ந்தான். தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற லோத்தை அந்நியர் சிறைப்பிடித்த போது தன் வீட்டிலுள்ள 318 ஆட்களைக் கொண்டு போய், விரட்டி முறியடித்து, லோத்தையும் பொருட்களையும் ஸ்திரீகளையும் மீட்டுக்கொண்டு வந்தான். ஆதி. 14:14-16. இவனுக்கு இப்படிதான் வேண்டும் என்று எண்ணாமல் அவனை மீட்டான். இன்று குடும்பங்களில் சொத்தைப் பங்கிடும்போது எவ்வளவு பிரச்சனைகள் எண்ணிப்பார்க்கவேண்டும். கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார் என்று நாம் இருக்க வேண்டும். அப்போது மேலான ஆசீர்வாதம் பெறுவோம்.

## 3. கர்த்தரை தொழுது கொண்டார்

கடவுளின் அழைப்பை பெற்று எங்கெல்லாம் சென்றானோ (ஆதி. 12:7,8, 13:4, 13:18) சென்ற இடமெல்லாம் கர்த்தருக்கு பலிபீடம் கட்டி தொழுது கொண்டார். எல்லாவற்றிலும் தசம பாகம் செலுத்தினான். ஆதி. 14:20. அவனை கடவுள் ஆசீர்வதித்தார்.

எனக்கு மிகவும் அருமையானவர்களே! நாமும் கர்த்தரின் சத்தத்துக்கு கீழ்ப்படிந்து, பிறரை நேசித்து, விட்டுகொடுத்து கர்த்தரை எல்லா நிலையிலும் தொழுதுகொண்டு அவருடைய பிள்ளைகளாய் வாழ்வோமென்றால் கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பார்.

“என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களைச் செய்வேன்.” எரேமியா 33:3 என்ற வார்த்தைக்கு கீழ்ப்படிவோம். ஆசீர்வாதமாக வாழ கர்த்தர் கிருபை செய்வாராக.

இறைப்பணியில்,
அருள்திரு. J. ஜெயக்குமார்.
சபை போதகர்.

# உதவி போதகர் மடல்

இறைவனை நேசிக்கும் இனியவர்களே! இணையற்ற இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். கர்த்தருடைய பெரிதான கிருபையால் கனத்திற்குரிய நமது ஆயர் அருட்திரு. J. ஜெயக்குமார் அவர்களோடு இணைந்து 2 ஆண்டுகள் திருப்பணி செய்யும் வாய்ப்புப் பெற்றேன். நிறைந்த அனுபவத்தோடும், நீடிய பொறுமையோடும், கருத்தான ஜெபத்தோடும், கர்த்தருக்குப் பயந்து அமீரகத்தின் தமிழ்த் தென்னிந்திய திருச்சபைகளையும், ஆயர்களையும் ஒருங்கிணைத்துத் திருப்பணிச் செய்த ஆயர் அவர்களின் அருட்பணிக்காலம், துபாய் தமிழ் திருச்சபைக்குப் பொற்காலம். அவர்கள் விட்டுச்செல்லும் திருப்பணிகளைத் தொடர சபையாய் ஆயத்தமாவோம். ஆயர் அவர்களின் தொடர் திருப்பணி கன்னியாகுமரி பேராயத்தின் புத்தளம் சேகர சபையில் கடவுளுக்கு மகிமையாய் அமைய ஜெபிப்போம். ஆண்டவர்தாமே நிறைந்த சுகத்தையும், நிலையான சமாதானத்தையும், நீடிய ஆயுளையும் ஆயருக்கும், ஆயரம்மாவுக்கும் வழங்குவாராக.

### கடவுள் விரும்புவது என்ன?

“..தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாய் இருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்” (யோவான் 4:23)

இன்றைய உலகில் மனிதன் சந்தித்துக் கொண்டிக்கும் அறிவியல் வளர்ச்சிகளும், புதிய கண்டுபிடிப்புகளும், நம்மை வியக்க வைத்தாலும், மனுக்குலத்தை ஆட்கொண்டிருக்கின்ற காலச்சூழல் வேறுபாடுகள், பொருளாதார நெருக்கடிகள், உறவுச் சிதைவுகள், வித்தியாசமான வியாதிகள், கலாச்சார மாற்றங்கள், சாதீய மோதல்கள், பரவி வரும் வன்முறைகள், பாலியல் பலாத்காரங்கள், ஏற்றத் தாழ்வுகள், பாரம்பரியக்கட்டுப்பாடுகள், இவைகளெல்லாம் நம்மைச் சிந்திக்க வைக்கின்ற நிகழ்வுகளாக உலா வருகின்றன. இந்நிலையில் நம்மையும், நம் குடும்பத்தையும், இத்தகைய தீங்கினின்று காப்பாற்றிக் கொள்ள நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் சுய விருப்பத்திற்கு முதலிடம் தந்து கடவுளின் விருப்பத்தைக் கடைநிலைக்குத் தள்ளிவிடுகிறோம் என்பது முற்றிலும் உண்மை. கடவுளை தொழுது கொள்ளுகிற நம்மைக் குறித்த அவருடைய விருப்பங்கள் சிலவற்றை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

1.விசுவாசிகளுடன் ஒன்றுபடுதல் (எசேக்கியேல் 37: 15-19): எசேக்கியேல் தீர்க்கத்தரிசியின் புஸ்தகம் 37-ஆம் அதிகாரம், 2 முக்கிய நிகழ்வுகளை நமக்குச் செய்தியாகக் குறிப்பிடுகின்றது. ஒன்று, உயிர்பெற்ற உலர்ந்துபோன எலும்புகள்(எசேக். 37:1-14). மற்றொன்று, உறவுக்கு உதாரணமான கோல்கள். (எசேக். 37:15-23). சவுல், தாவீது, சாலொமோன் போன்றோர்கள் அரசாட்சியில் சில வீழ்ச்சிகள் இருந்தாலும்,

இஸ்ரவேலரின் வாழ்வில் அவர்களது ஆட்சிக்காலம் பொற்காலங்களாய் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. அரசர் சாலொமோனின் மறைவுக்குப்பின் வடநாடு (இஸ்ரவேல்), தென்நாடு (யூதா) என இரண்டாக உடையப்பட்ட இஸ்ரவேல் நாடு அண்டைநாட்டு எதிரிகளின் ஆளுகைக்கு அடிமையாயின. இஸ்ரவேல் நாட்டிற்கு ஏன் இந்த அவல நிலை? நாட்டு மக்களிடையே ஏற்பட்ட பிரிவு, செல்வாக்கை வெளிப்படுத்த அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டனர். பண்டிகைக் கொண்டாட்டங்களில் போட்டிகள், தொழுகைக்கூடங்கள் அமைப்பதிலும் கருத்து வேறுபாடுகள், இதனால் பொருளாதாரம் சரிந்தது. சட்டம் சீர்குலைந்தது. அடிமைகள் ஆயினர். வாழ்விழந்து நிற்கின்ற இஸ்ரவேலை வளமுள்ளதாக்க, ஒன்றுபடுத்த கடவுள் எசேக்கியேல் தீர்க்கனை பயன்படுத்தினார். இரண்டு கோல்களை எடுத்துக்கொள். கோத்திரங்களின் பெயர் எழுது. இரண்டு கோல்களையும் இசைக்க முயற்சி செய். உன் கையில் அவைகளை ஒன்றாக்குவேன் என்றார்.

அழைக்கப்பட்டவர்களின் கூட்டமாய் இணைகின்ற திருச்சபையின் விசுவாசிகளுக்குள் "ஒருமனம் நிலைத்திருத்தல்" கடவுளின் விருப்பமாகும்.

### 2. வேதவாக்கியங்களுடன் ஒன்றுபடுதல் ( 2 தீமோத்தேயு 3:16,17):

திருமறை என்று அழைக்கப்படுகிற "தூய ஆவியானவரின் நூல்" நமக்குத் தேவையான மொழிகளிலே மொழியாக்கம் செய்யப்பட்டு நம் கரங்களில் தவழுவது கடவுள் நமக்குச் செய்திருக்கும் மாபெரும் நன்மை. "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதி உள்ளவனாகவும், இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என அப்போஸ்தலனாகிய பவுல், தனக்குப் பிரியமான குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு ஆலோசனை சொல்லுகின்றார். மனித அறிவுக்கும், இறை ஞானத்திற்கும் வித்தியாசம் உண்டு. உலகத்தில் நாம் பெற்றுக்கொண்ட படிப்பறிவு, பட்டறிவு இவைகளை சரியான நிலையில் இடம், பொருள், காலம் அறிந்து பயன்படுத்த இறைஞானம் அவசியம். கடவுள் ஆலோசனைகளாக, கடவுளின் ஆசியை சொந்தமாக்கும் வழிமுறைகளாக நம்மிடம் இருக்கின்ற திருமறையோடு ஒன்றுபடுதல் கடவுளின் விருப்பமாகும். ஏனென்றால், உலக அறிவிருந்தும் தோல்வியை வாழ்வில் சந்தித்தவர்கள் கடவுளின் ஆலோசனையாகிய திருமறை வாக்குகளால் வாழ்வு பெற்றிருக்கின்றனர்.

அன்பானவர்களே! நாமும் விசுவாசிகளுடனும் வேதவாக்கியங்களுடனும் ஒன்றுபட்டு வாழ்ந்து கடவுளின் விருப்பத்தை நிறைவேற்ற நம்மை அர்ப்பணம் செய்வோம். இறையருளும், ஆசியும் நம்மில் நின்று நிலவுவதாக. ஆமென்.

இறைப்பணியில் உங்களுடன்,
அருட்திரு. V. சாமுவேல் ஜெபராஜ்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

அன்றாடம் நம்மை அற்புதமாய் வழிநடத்தும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் வணக்கம்.

## சிந்தனைக்கு ஒரு சிறுகதை

ஒரு பள்ளியில் நன்னெறி வகுப்பு.
வகுப்பில் அமர்ந்திருந்த சிறுமியிடம் கேள்வி கேட்டார் ஆசிரியர்.
உங்க வீட்டுல மொத்தம் எத்தன பேரு பாப்பா?
நாங்க மொத்தம் அஞ்சு பேரு. எங்க அப்பா, அம்மா, ரெண்டு அண்ணா அப்புறம் நானு.
ரெண்டு அண்ணன்ல உங்க அப்பா அம்மாவுக்கு யாரைப் புடிக்கும்?
எங்க அப்பா அம்மாவுக்கு, பெரிய அண்ணனைப் புடிக்கும். ஏன்னா, அவருதான் வயசுல பெரியவரு. சின்ன அண்ணனையும் புடிக்கும். ஏன்னா, அவருதான் வயசுல சின்னவரு.

உங்க ரெண்டு அண்ணன்ல யாருக்கு உன்னைப் புடிக்கும்?
பளீரெனச் சொன்னாள்
ரெண்டு பேருக்குமே என்ன ரொம்...ம்..பப் புடிக்கும். ஏன்னா நான்தான் கடைக்குட்டிச் செல்லம்.
விடவில்லை ஆசிரியர்.
சரி, உனக்கு அப்பாவப் புடிக்குமா? அம்மாவப் புடிக்குமா?
எனக்கு அப்பாவ ரொ..ம்..ப புடிக்கும். ஏன்னா அவரு என்னோட அப்பா. எனக்கு அம்மாவயும் ரொம்ப புடிக்கும். ஏன்னா அவுக என்னோட அம்மா.

அடுத்த கேள்வியைக் கேட்குமுன், முந்திக்கொண்டு ஆசிரியரை ஒரு கேள்வி கேட்டாள் சிறுமி.
ஏன் சார்.. இந்த மாதிரி கேள்விகளையெல்லாம் என்னிடம் கேட்கிறீர்கள்?
சிறுமி கேட்டாள் ஆசிரியரிடம்

சார்..கூட்டு வாழ்வு சிறக்க, நாங்க என்ன செய்ய வேண்டும்..?
கேட்டு நின்ற சிறுமியிடம் ஆசிரியர் சொன்னார், செயல் முறையில் விளக்குகிறேன். கூர்ந்து கவனியுங்கள்.

நான்கு கண்ணாடி டம்ப்ளர்களை சுத்தமான நீரால் நிரப்பினார்.
முதல் டம்ப்ளரில்
ஒரு சிறு கல்லைப் போட்டார். கல் நீரோடு ஒட்டவில்லை. ஆனால் நீருக்குள்ளேயே அசைவற்றுக் கிடந்தது.

ஆசிரியர் விளக்கினார்:
பார்த்தீர்களா! நீருக்குள் தான் கல் இருக்கிறது. ஆனால் நீரோடு ஒட்டவில்லை.
இதே போல் சமுதாயத்தில் வாழும் பலர் யாரோடும் ஒட்டாமல் வாழ்வார்கள். தனிமைவாதிகள்.

இரண்டாம் டம்ப்ளரில்
ஒரு பஞ்சைப் போட்டார். போட்ட வேகத்தில் நீரைக்குடித்துவிட்டு மதமதவென்று மிதந்து திரிந்தது:
பார்த்தீர்களா! இதே போல் தான் சமுதாயத்தில் பலர். கிடைக்கும் எல்லா சலுகைகளையும் அனுபவித்துவிட்டு மதமதவென்று திரிவார்கள். சுயநலவாதிகள்.

மூன்றாவது டம்ப்ளரில்
ஒரு களிமண் உருண்டையைப் போட்டார். போட்டவுடன் உடைந்து சுத்தமான நீரை நாசமாக்கிக் கலங்கடித்தது.
பார்த்தீர்களா! இதே போல் தானும் கெட்டு சமுதாயத்தையும் கெடுத்துக் கொண்டிருப்பார்கள் பலர்.

நான்காவது டம்ப்ளரில்
ஒரு கரண்டி சீனியைப் போட்டார். கொஞ்சம் கொஞ்சமாக நீரோடு நீராகித் தன்னையே இழந்து காணாமல் போனது.
சுவைத்துப் பாருங்கள்!
இனிமையான சுவை!
சுவைத்தனர்.

பார்த்தீர்களா..! இதே போல் சிலர் கூட்டு வாழ்வில் தானும் இனித்து பிறரையும் இனிமையாக்குவர். இனிய கிரியா ஊக்கிகள்.
வகுப்பை நிறைவு செய்தார் ஆசிரியர்.
“இளையோரே, முதியோரே நீங்கள் சமுதாயத்தில் எப்படி இருக்க விரும்புகிறீர்கள்?

கல்லாகவா?
பஞ்சாகவா?
களிமண்ணாகவா?
சீனியாகவா?”

“நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்பும் உள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்”. (பிலிப்பியர் 2:2)

உங்களுக்காக ஜெபிக்கும்,
திருமதி. செலின் சாமுவேல்,
உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த மாதத்தை ஆசீர்வதித்த கர்த்தருக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன். இந்த புதிய மாதமும் சபை மக்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருக்க தேவனை மன்றாடுகிறேன்.

இரண்டு வருட காலம் கர்த்தரின் ஊழியத்தை எங்களால் முடிந்த வரை நாங்கள் கர்த்தருக்கென்று மகிமையாகச் செயல்பட கர்த்தர் துணைபுரிந்தார். இதற்காக ஜெபித்த, ஒத்துழைத்த சபையார் அனைவருக்கும் நன்றி.

May 1 ஆம் தேதி ஆண்கள் சங்கத்தினர், உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு நமக்கு உழைக்க ஜீவன், சுகம், பெலன் கொடுத்த தேவனை துதித்து சிறப்பு ஆராதனை நடத்தினார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றி. May 12 ஆம் தேதி Nurses Day அதனை சிறப்பிக்கும் வண்ணம் நமது சபையின் அனைத்து செவிலியர்களும் அவ்வார வெள்ளி ஆராதனையில் சிறப்புப்பாடல் பாடினார்கள். அனைத்து செவிலியர்களுக்கும் நன்றி. உங்கள் சேவையினிமித்தம் இந்த ஆராதனையில் கலந்து கொள்ள முடியாதவர்கள் அடுத்த ஆண்டு கலந்து கொண்டு கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். உங்கள் சேவை பாராட்டுக்கு உரியது.

May 20 ஆம் தேதி அன்று ஆயர் தலைமையில் Rashid Center for Disabled சென்று 4 Wheel Chairs ஐ நமது சபையின் சார்பாக, Donation ஆக கொடுக்க கர்த்தர் கிருபை செய்தார். அவை அந்த பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இதை பெற்றுக் கொண்ட ஸ்தாபகத்தின் Director, Mrs. மரியம் அவர்கள் நமக்கு நன்றி கூறியதோடு, ஒரு நினைவு பரிசையும் கொடுத்தார்கள். நாம் இது போன்ற பொது சேவைகளை நாம் வாழும் நாட்டிற்கும் செய்ய இன்னும் முயற்சிகளை எடுப்போம்.

நமது ஆயர் Rev.J.Jayakumar அவர்களின் பிரிவு உபசார விழா 22 ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. ஆயரை கனப்படுத்திய சபையார் அனைவருக்கும், குழுக்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

May 29 ஆம் தேதி அன்று Junior Church பிள்ளைகள் சிறப்பு ஆராதனை நடத்தினார்கள். Junior Church பிள்ளைகளுக்கும், Superiendant Mrs. Rachel Manuel மற்றும் ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றி. Junior Church Retreat சிறப்பாக JSS School-ல் வைத்து நடைபெற்றது. Mr. James Richard அவர்களுக்கு சபைகுழுவின் சார்பில் நன்றியும், அதற்காக உதவிய Mrs. Leela Bai அவர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

June 5 ஆம் தேதி நடை பெற உள்ள சபையின் பொது குழுவில் சபையார் ஜெபத்துடன் தவறாமல் கலந்து கொண்டு உங்கள் ஒத்துழைப்பை சபையின் நலனுக்காக அளியுங்கள். சபை குழு தேர்தலுக்கு தகுதியுடைய வாக்காளர்கள், ஏற்கெனவே நாம் ஆராதனையில் அறிவித்த வண்ணம் தவறாமல் கீழ் கண்டவற்றில் ஒன்றை கொண்டு வந்து Identity Proof செய்ய வேண்டும். எனவே இதை மனதில் கொண்டு சபையின் நலனுக்காக ஒத்துழையுங்கள்.

1. Valid Emirates ID Original (or)
2. Passport with Residence Visa (Original) or
3. Labour Card Original

வேறு எந்த விதமான Identification ம் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.

June 5 ஆம் தேதி ஆராதனை காலை 6 மணிக்கு E4 Halll வைத்து நடைபெறும். அதை தொடர்ந்து சபை பொதுகுழு கூட்டம் அதே Hall ல் வைத்து நடைபெறும்.

நமது ஆலயத்தில் மூன்று ஆண்டு காலமாக, இரண்டு சபைகுழுவுடன் இணைந்து பல ஆலோசனைகளை வழங்கி எல்லா காரியங்களிலும் ஒத்துழைப்பு தந்து, சிறந்த ஊழியம் செய்த நமது ஆயரின் பணி மிகவும் பாராட்டத்தக்கது. அவர்கள் நம் மத்தியில் இருந்த நாட்கள் பொற் காலங்கள். தனது மூன்று ஆண்டு பணிக்காலத்தை கர்த்தருடைய கிருபையால் சிறப்பாக முடித்து தாயகத்துக்கு திரும்பும் நமது ஆயர் அருள்திரு. J. ஜெயக்குமார் அவர்கள் ஊழியங்கள் சிறக்க நமது வாழ்த்துக்கள். கர்த்தர் தாமே அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து நடத்துவாராக.

சிங் ரெத்னம், செயலர்

# இயேசு கை இறுதி விருந்து

பன்னிரெண்டு அப்போஸ்தலர்
முன்னிருக்கும் இயேசு
முன்னிரவு உணவுக்கு
தன்னிரைவு செய்து

மேல்மாடியில் பஸ்காவுக்கு
மனமுவந்து வந்து
காலத்தில் கலந்து
கருணையுடன் இயேசுபேச்சு

பாடுபடப் போகுமுன்
பஸ்காவில் உங்களுடன்
பானம்பண்ண ஆசைப்பட்டு
காத்திருந்தேன் காலம்வர

தேவத்திரு ராஜ்யத்தில்
நிறைவேறும் மட்டிலும்
ஆவலில்லை இனிஇதை
புசிக்கவே மாட்டேன்

தேவமகன் இயேசுஉம்
திறந்துஇதைத் தெரிவித்தார்
தாமேதம் பாத்திரத்தைத்
ஸ்தோத்தரித்தும் கொடுத்தார்

தேவராஜ்யம் வருமளவும்
திராட்சைப் பழரசத்தைத்
தேவையாகப் பருகநான்
போவதில்லை யென்றாரேசு

ரத்தத்தால் உடன்படிக்கை
சித்தத்தைச் சொல்லி
பத்திரமாய்க் கொடுத்தார்
பாத்திரத்தை எடுத்து

இறுதியாயும் உறுதியாயும்
பூமியிலே இயேசு
ஒருமித்த சீடருக்கு
அருளினார் பிரிவுரை.

ஆதாரம் : லூக்கா 22:14-22.
கவிதை எண் : 177.
ஆக்கம் : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

கர்த்தரின் நியாயத்தீர்ப்புக்கு முன் நீதிமான் தண்டிக்கப்படுவதில்லை

ஆதிகாலம்
முதல்
இந்தக்காலம்
வரை
நீதி
வழுகியிருப்பதும்
நிரபராதி
தண்டனையை
தழுவியிருப்பதும்
நீதி தந்த
அரசர்களை
போற்றுவதும்
அறம் தவறிய
அரசர்களை
தூற்றுவதும்
சரித்திரம்
தரும்
சான்றுகள்.
பாவத்தை
தாமே
ஏற்று
அன்பை
போதித்த
ஆண்டவர்
இயேசுவையே
நீதியை
வளைத்து
தண்டித்தது
அன்றைய
அரசு.
ஆள்பவர்களும்
அதிகாரிகளும்
சில காலங்களில்
சில நேரங்களில்
நீதியை
சிதைத்து
உண்மையை
புதைத்து
சாய்ந்தான்
பக்கம்
சாய்ந்தும்
நீதியரசர்கள்
நிலை
தடுமாறுவதும்
தொடர்கதை.
உலகம்
வளர்ச்சியின்
உச்சம்
எனினும்
நீதிமான்கள்
அச்சத்துடன்
வாழ்கிறார்கள்.
நீதிமான் இக்கட்டின்று
விடுவிக்கப்படுவான்
நீதி.11:8
எந்தநிலை
வரினும்
எதிர்கொள்ள
நீதிமான்
தயங்குவதில்லை
கஷ்டம்வரினும்
நஷ்டம்வரினும்
அவர்களை
காப்பாற்ற
கர்த்தரின்
ஒளி பிறக்கும்
வழி திறக்கும்
காரணம்
நீதியைப்
பின்பற்றுகிறவனையோ
அவர் நேசிக்கிறார்.
நீதி.15:9
நீதிக்காக...
தடுமாறாதவரையும்
தடம் புரளாதவரையும்
நெறி தவறாதவரையும்
கர்த்தர்
நேசிக்கிறார்.
கடவுளாம்
கர்த்தரின்
கிருபையில்
நீதிமான்
பலம்பெறுகிறான்
வலம் வருகிறான்
பரலோகம்
உண்டு என்பதும்
அங்கு...
நியாயத்தீர்ப்பு
உண்டு என்பதும்
புனித பைபிள் தரும்
நற்செய்தி.
அங்கே நீதிமான்
தலைநிமிர்ந்து
நிற்பான்.
பரலோக
வாழ்வின்
பாதை திறக்கும்
தண்டனை
இல்லவே இல்லை
அன்பரே....
நேர்கொண்ட
பார்வையும்
நிமிர்ந்த
நன்னடத்தையும்
கொண்டு
நீதியாய் வாழ்வோம்
பரலோக வாழ்வில்
பிரவேசிப்போம்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# தெய்வீக அன்பு (Agape Love)

மொழிகளில் மிகவும் வளமை வாய்ந்த கிரேக்க மொழியில் அன்பு என்ற வார்த்தை 3 வகையாக பழக்கத்தில் இருந்தது. நண்பர்களுக்கிடையே உள்ள அன்பு உறவை பிலியா (philia) என்றும் உறவினர்களுக்கிடையே உள்ள அன்பு உறவை ஸ்டோர்ஜ் (storge) என்றும் கணவன் மனைவிக்கிடையே உள்ள அன்பு உறவை எரோஸ் (eros) என்றும் வழக்கத்தில் இருந்தது. அன்பு என்றாலே ஏதாவது உறவின் அடிப்படையில் மாத்திரமே இருந்தது.

இயேசு கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்த காலத்தில் அவர் காட்டின அன்பு எப்படிப்பட்டது? அன்பு கூறப்பட கூடாதவர்கள், எல்லாராலும் ஒதுக்கப்பட்டவர்கள், வியாதிப்பட்டோர், தொழுநோயாளிகள், தன்னை சிலுவையில் அறைந்தவர்கள் - இவர்களிடம் இயேசு கிறிஸ்து காட்டின அன்பை வெளிப்படுத்த வார்த்தைகள் இல்லாத சூழ்நிலையில் உருவான கிரேக்க வார்த்தை அகேப் (agape) தெய்வீக அன்பு. இந்த அன்பு நிபந்தனை அற்ற அன்பு, நித்தியமான (மாறாத) அன்பு, தன்னலமற்ற அன்பு, தியாகமான அன்பு, இந்த தெய்வீக அன்பின் ஆழம், நீளம், உயரம், அகலம் அறிந்துகொள்ள பவுல் அப்போஸ்தலனை போல பிரயாசப்படுவோம். எபேசியர் 3:18, 19.

தேவனுடைய கோபம் எவ்வளவு உண்மையோ அதே போல் அவருடைய அன்பும் உண்மை. அவருடைய கோபத்தை அறியாமல் அவருடைய அன்பை அறியமுடியாது.

இருளும் வெளிச்சமும் எவ்வளவு உண்மையோ அதுபோல கோபமும் அன்பும் நிச்சயம். மத்தேயு 25:14 - அவருடைய கோபத்துக்கு ஆளாகிறவர்களுக்கு நித்திய அக்கினி.

ஆம், நாம் தேவனுக்கு கீழ்படிந்து அவருடைய அன்பின் ஆளுகையில் வாழ்வோம். அவருடைய அன்பை அதிகமாக அறிந்து கொள்ளும்போது இயேசு கிறிஸ்து நமக்கு தந்த இரண்டு கற்பனைகளுக்கும் கீழ்படிய முடியும். மத்தேயு 22:37-40

1.உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக.

2.உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக.

இப்படியாக நாம் தேவனிடத்தில் அன்புகூரும் போது உன்னதபாட்டு 4:10, 13 மணவாளன் மணவாளியிடம் உன் நேசம் எவ்வளவு இன்பமாயிருக்கிறது. என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டம் என்று கூறுகிறார். இதனுடைய விளக்கவுரை இந்த வேலியை இருளின் ஆதிக்கங்கள் உடைக்க முடியாது. A hedge of protection is made around which all the powers of darkness cannot break through.

யோபு பக்திமானை சுற்றியும் வேலி இருந்தது. சாத்தான் அடிக்கடி அனுமதி வாங்கி சோதித்தான். நாம் யோபுவைப் போல பக்திமானாக மாத்திரம் இருந்துவிடாமல் ஒருபடி கூட முன்னேறி அவருடைய அன்பின் ஆளுகையில் எப்போதும் களிகூர்ந்து அநேக ஆத்துமாக்களை அவருடைய அன்பின் ஆளுகைக்குள் கொண்டு வருவோம். தெய்வீக அன்பின் வெளிப்பாட்டை வரும் நாட்களில் நம் ஒவ்வொருவருக்கும் தேவன்தாமே தருவாராக.

பாமாலை. 112 O Love Divine how sweet Thou art.

தெய்வன்பு தான் மாஇனிமை
அதற்கென்றே என் உள்ளத்தை
கொடுத்திருக்கிறேன்.
என் மீட்பர் அன்பின் அளவை
அறிவதே என் மகிமை
எப்போது அறிவேன்.

ஷைலா டேவிஸ்

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜுன் 2015

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 05-06-2015 | கிறிஸ்தவ தலைமைத்துவம் | யாத்தி. 18:18-27 | அப்போ. 6:1-7 | மாற்கு 10:35-45 | 122 |
| 12-06-2015 | கடவுளின் மாட்சியை அறிவிக்கும் படைப்பு | நீதி. 8:22-31 | வெளிப். 21:1-8 | லூக்கா 8:22-25 | 19 |
| 19-06-2015 | உண்மையோடும் ஆவியோடும் ஆண்டவரை தொழுவோம் | ஏசாயா 6:1-8 | 2 தெசலோ. 2:13-17 | யோவான் 4:15-26 | 139 |
| 26-06-2015 | சீடத்துவத்தின் மதிப்பு | தானியேல் 6:11-23 | 2 கொரிந். 6:1-10 | மாற்கு 10:35-45 | 34 |

# என்னை நம்பும்

பில்லி கிரகாம் வாலிபனாக இருந்த போது, தேவனுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வம் உடையவராக இருந்தார். ஒரு நாள் தன் நண்பர்களோடு கால்பந்து விளையாடிக் கொண்டிருந்த நேரத்தில் அவர் உள்ளம் தேவனோடு உறவாடிக் கொண்டிருந்தது. கர்த்தர் பில்லி கிரகாமின் உள்ளத்தில் உலகத்திலுள்ள மற்ற வாலிபர், வயோதிபர், சிறியோர், பெரியோரின் ஆத்தும தேவைகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார். விளையாட்டு முடிந்து நண்பர்கள் எல்லோரும் தம்தம் வீட்டிற்கு சென்றுவிட்டனர். பில்லி கிரகாமோ அந்த கால்பந்து மைதானத்திலே முழங்கால்படியிட்டு, ஆண்டவரே என்னை நம்பும், என்னை நம்பும், உமது பார்வையிலே என்னை நம்பிக்கைக்கு உரியவனாக்கும் என்று கதறி அழுதார். ஏறத்தாழ நான்கு மணிநேரம் அந்த வார்த்தைகளையே சொல்லி மிகுந்த சத்தத்தோடு ஜெபித்தார். கர்த்தருடைய ஆவியானவர் வல்லமையாக இறங்கி அவரை அபிஷேகித்தார். மாபெரும் விளையாட்டு வீரரான அவரை மாபெரும் சுவிசேஷவீரனாக மாற்றினார். என்னை நம்பும் என்று கதறின ஒரு பில்லி கிரகாமைக் கொண்டு ஆண்டவர் கோடிக்கணக்கான மக்களுக்கு பிரயோஜனமாக மாற்ற முடியுமானால், நம் இருதயத்தின் வாஞ்சையைப் பார்த்து நம்மையும் மற்றவர்களுக்கு பிரயோஜனமாக மாற்றுவது நிச்சயமல்லவா? கர்த்தருடைய நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கிறோமா? நம் நேசருக்காக எதையாவது செய்வோம். அவர் நாமத்தை உயர்த்துவோம். அவருக்காக வாழ்ந்திடுவோம். அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். - மத் 16:24

என் வாழ்வில் இழந்த நன்மைக்கீடாய் எஞ்சிய நாட்களில் உழைப்பேனே
நீர் தந்த ஈவு வரங்கள் யாவும் உம் பணி சிறக்க முற்றும் தந்தேன்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே - எந்தன் அனைத்தும் அர்ப்பணமே
என் முழுத்தன்மைகள் ஆவல்களும் அனைத்தும் கிறிஸ்துவுக்கே

இனிதா மோசஸ்

# ஆராதனை பாடல்கள் - ஜுன் 2015

## பாமாலை - கீர்த்தனை

**05-06-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 166 | சபையின் அஸ்திபாரம் |
| பாமாலை | 124 | நீர் திவ்ய வழி இயேசுவே |
| கீர்த்தனை | 36 | கண்களை ஏறெடுப்பேன் |
| கீர்த்தனை | 126 | நம்பி வந்தேன் மேசையா |
| பாமாலை | 175 | கர்த்தரின் மாம்சம் |

**12-06-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 1 | அநாதியான கர்த்தரே |
| கீர்த்தனை | 109 | பாதகன் என் வினை தீர் ஐயா |
| பாமாலை | 90 | தெய்வாவீ மனவாசராய் |
| கீர்த்தனை | 169 | எங்கும் புகழ் இயேசு |
| கீர்த்தனை | 151 | யேசுவே கிருபாசனபதியே |
| கீர்த்தனை | 125 | தேவபிதா என்றன் |

**19-06-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 3 | ஆ கர்த்தாவே தாழ்மையாக |
| பாமாலை | 131 | பாதை காட்டும் |
| கீர்த்தனை | 164 | தந்தேன் என்னை இயேசுவே |
| கீர்த்தனை | 133 | தெய்வன்பின் வெள்ளமே |
| கீர்த்தனை | 17 | தோத்திரம் செய்வேனே |

**26-06-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 16 | போற்றும் போற்றும் |
| பாமாலை | 140 | ஆராய்ந்து பாரும் கர்த்தரே |
| பாமாலை | 112 | தெய்வன்புதான் மா இனிமை |
| கீர்த்தனை | 147 | பரனே திருக்கடைக்கண் பாராயோ |
| கீர்த்தனை | 161 | என்னை ஜீவபலியாய் |
| கீர்த்தனை | 124 | துங்கனில் ஒதுங்குவோன் |

# நமக்கு மிக மிக சாதாரணம்

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே, நமக்கு மிக சாதாரணமாக தோன்றுகிற, ஆனால் வேதத்தின் அடிப்படையில் மிகவும் கவனமாயிருக்க வேண்டிய பல காரியங்களை குறித்து கடந்த தூதனில் பார்த்தோம். இதோ மேலும் சில:

பயம் - நம்மில் பலருக்கு எங்கும் பயம். எதிலும் பயம், எதற்கும் பயம். நாம் நினைக்கலாம் பயம் என்ன? சிறிய காரியம் தானே, அதுவும் சாதாரணமாக உள்ளது தானே என்று. சரிதான். இந்த பயத்தைப் பற்றி வேதத்தில் சாட்சி சொல்பவர் யோபு. அவர் சொன்னது, "நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது. நான் அஞ்சினது எனக்கு வந்தது. எனக்கு சுகமுமில்லை, இளைப்பாறுதலுமில்லை, அமைதலுமில்லை, எனக்கு தத்தளிப்பே நேரிட்டது." யோபு 3:25. யோபு சாத்தானால் சோதிக்கப்பட்டது உண்மைதான். கர்த்தரும் அனுமதித்தார். ஆனால் அந்த சோதனை யோபுவை அண்ட, அவரது பயமே ஒரு வகையில் நுழைவாயில் ஆயிற்று. பாருங்கள், கர்த்தரால் வேலியடைத்து பாதுகாக்கப்பட்ட மனிதன், தன் வேலியை பயத்தினால் பிடுங்கிபோட்டதை - மனுஷனுக்கு பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்". (நீதி. 29:25) என்று வேதம் எச்சரிக்கின்றது.

கீழ்ப்படியாமை - பெரியவர்களானாலும் சரி, சிறியவர்களானாலும் சரி, கீழ்ப்படிதல் என்ற வார்த்தையே மிகவும் கசப்பானது. ஏதாவது ஒரு காரியம் நம்மிடம் செய்ய கேட்கபடும்போது அந்த கடமையிலிருந்து விலக ஆயிரம் காரணங்களை உடனடிபதிலாக வைத்திருப்போம். "அவன் என்ன சொல்ல, நான் என்ன கேட்க" என்ற மனோபாவம் வேறு. வேதத்தில் மோசே என்பவர் கர்த்தருக்கு மிகவும் பிரியமானவர். இவர் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவர், தேவனை முகமுகமாய் தரிசித்து உறவாடியவர். இவரைக் குறித்து தேவனே நற்சாட்சி கொடுத்திருக்கிறார். இத்தனை சிலாக்கியமும் பெற்ற மோசே ஏன் வாக்குதத்தம் பண்ணப்பட்ட பாலும் தேனும் ஓடும் கானானுக்குள் பிரவேசிக்கமுடியவில்லை? ஒரு சிறிய கீழ்படியாமையின் காரணமே. கர்த்தர் கன்மலையை பார்த்து பேசு என்றார். இவரோ கோலால் ஓங்கி அடித்தார். இந்த சிறிய தவறை தேவன் மன்னித்து நிராகரித்திருக்கலாமே. ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. இதை குறித்து என்னிடம் பேசவும் வேண்டாம் என்று மோசேயிடம் கண்டிப்பாகவும் கூறிவிட்டார். ஒரே ஒரு தரம் கீழ்ப்படியாமறபோன அத்தனை பிரியப்பட்ட மோசேக்கே அந்த தண்டனை எனில், எத்தனையோ முறை அவர் வசனத்துக்கு கீழ்படியாமல் எதிர்த்து நிற்கும் நமக்கு???

கர்த்தருடைய வேதத்தை மறத்தல் - அடிக்கடி நமது காதுகளில் ஒலிக்கும் வார்த்தை "இன்றைக்கு வேதம் வாசித்தாயா? ஜெபித்தாயா?" அன்றாடம் கேட்பதினால் அது மிகவும் சாதாரணமாகி விட்டது. கர்த்தர் தமது வேதத்தை குறித்து சொல்வது என்னவென்றால், "நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும், உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாக கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபககுறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்து இருக்கும்போதும், வழியிலே நடக்கிற போதும், படுத்துக்கொள்ளும் போதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்து பேசுவீர்களாக. வேதத்தை நீ மறந்தால் நானும் உன்பிள்ளைகளை மறந்து விடுவேன்" ஓசியா 4:6. வேதத்தை நாம் மறந்தால் தண்டனை யாருக்கு? நாம் நேசிக்கும் அன்பு பிள்ளைகளுக்கு தினமும் வேதம் வாசிக்கிறோமா? அதன்படி நடக்கிறோமா? நினைத்துப் பாருங்கள் கர்த்தர் இல்லாத பிள்ளைகளின் வாழ்வை.

கர்த்தருடைய பந்தியில் அபாத்திரராய் பங்குபெறுதல் - கர்த்தரின் பந்தி என்பது, கர்த்தர் நமக்காக பிட்கக் கொடுத்த, அவரது சரீரத்தைப் புசித்து, அவரது இரத்தத்தைப் பானம் பண்ணி, அவர் வரும் வரை அவரை நினைவுகூருதல் ஆகும். இந்த பந்தியில் பங்குபெறுவதற்கான ஆயத்த முறைகளை நாம் சிறுவயது முதல் பெற்றோரால் போதிக்கப்பட்டும் சிறுவர் வேதபாடசாலை ஆசிரியரால் கற்பிக்கப்பட்டும், அனுதினமும் வேதத்தில் வாசித்தும் வருகிறோம். பலரது வாழ்வில் இந்த பந்தியானது ஒரு கடமையாகி, இதில் அபாத்திரராய் பங்கு பெறுவதினால் அது தன் பரிசுத்தத்தை இழக்கிறது. வேதம் சொல்லுகிறது, "எந்த மனிதனும் தன்னை தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தை புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். தன்னைத்தான் சோதித்து (ஒரு நிமிடம் இருதயத்தை திறவுங்கள்). கணவரோடு அல்லது மனைவியோடு உறவின் விரிசல், பெற்றோரோடு அல்லது சகோதரரோடு உள்ள குறைபாடுகள், உறவினரோடு, உள்ள காழ்ப்புணர்ச்சிகள், பலிபீடத்தின்முன் அவர் பந்திக்காக ஆயத்தமில்லாமல் முழங்காற்படியிடும் உனக்கு வேதம் தரும் எச்சரிக்கை - ஆக்கினைத் தீர்ப்பு, பலவீனம், வியாதி, பலரது மரணம். 1 கொரிந்தியர் 11:28. ஆகையால் நம்மை நாமே நிதானித்து பரிசுத்தரோடு, பயபக்தியோடு அவர் பந்தியில் சேர்வோம்.

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணம் - பரிசுத்த ஆவியானவர் திருத்துவத்தில் ஒருவர். இவரது அபிஷேகம், வரங்கள், கனிகள் என்பவைகள் இன்று பல சபைகளில் சர்ச்சைக்குள்ளான காரியம். ஆனால் வேதம் சொல்லுகிறது. "எந்த பாவமும், எந்த தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும். எவனாவது பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பேசினால் அது இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை." மத்தேயு. 12:31. நம் பாவம் மன்னிக்கப்படாமல் நாம் பரலோகத்தில் சேர்வது எப்படி?

புனிதா தாஸ்.

# திருச்சபை ஜெபநாள் 07-06-2015 (முதல் ஞாயிறு)

"...என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்." சங்கீதம் 5:2

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிறு தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய மாதத்தைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- தொழிலாளர் தின ஆராதனை, சிறுவர் ஆராதனை, சிறுவர் தியான முகாம் யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
